

# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | மார்ச் 05, 2020 | புரட்சி 19 | முழக்கம் 08 | விலை: ரூ.3.00

## மயிலைப் பகுதியில் மனிதச் சங்கிலி

# குடியுரிமை சட்டங்களுக்கு எதிராக தமிழகத்தில் தொடர் போராட்டங்கள்






*குடியுரிமை சட்டங்களுக்கு எதிராகவும், தமிழக சட்டமன்றத்தில் குடியுரிமை திருத்தச் சட்டங்களை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தியும் தமிழ்நாடு போராட்டக் களமாக மாறி நிற்கிறது.*

சென்னை வண்ணாரப்பேட்டை பகுதியிலும் மக்கள் 24 மணி நேரமும் தொடர் போராட்டம் நடத்தி வருகிறார்கள். மாநாடுகள், ஆர்ப்பாட்டங்கள், கருத்தரங்குகள், மனித சங்கிலி, கையெழுத்து இயக்கங்கள் என்று தமிழகமே கொந்தளித்துள்ளது. குடியுரிமை திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட பிறகு அதை எதிர்த்துப் போராடியவர்கள் மீது பா.ஜ.க. ஆட்சி நடக்கும் மாநிலங்களில் கட்சிகளை கொடூரமாக ஒடுக்கின. அசாமில் 6 பேரும், உ.பி.யில் 19 பேரும், கருநாடகாவில் 2 பேரும் துப்பாக்கி சூட்டுக்கு பலியானார்கள். டெல்லியில் சங்கிகள் வெளி மாநிலத்திலிருந்து வன்முறையாளர்களை இறக்குமதி செய்து இஸ்லாமியர்கள் மீது நடத்திய கொலை வெறியாட்டத்தில் இதுவரை 47 பேர் உயிரிழந்து விட்டனர்.

காஷ்மீரில் 370ஆவது பிரிவை நீக்கி, அயோத்தியில் மசூதியை இடித்த இடத்தில் ‘ராமன்’ கோயிலைக் கட்ட நீதிமன்றத் தீர்ப்பைப் பெற்ற ஆணவத்தில் குடியுரிமை திருத்தச் சட்டத்தையும் கொண்டு வந்து நிறைவேற்றி விடலாம் என்று இறுமாப்புடன் செயல்பட்ட ‘மோடி-அமித்ஷா’ அணி இப்போது சர்வதேச நாடுகளின் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கிறது. அமெரிக்காவின் வெளி விவகாரத் துறை, அய்.நா.வின் மனித உரிமை ஆணையம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புகள் இந்தியா - மத மைனாரிட்டி மக்களுக்கு எதிராக தவறான பாதையில் செயல்படுவதை சுட்டிக்காட்டியுள்ளனர்.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடக்கும் பீகாரில் குடியுரிமை பதிவுச் சட்டத்தை ஏற்க மாட்டோம் என்று சட்டமன்றம் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றியிருப்பதோடு கேரளா, மே. வங்கம், பஞ்சாப், ஜார்கண்ட், மத்திய பிரதேசம், புதுச்சேரி, இராஜஸ்தான் உள்ளிட்ட மாநில சட்டமன்றங்களும் இந்தச் சட்டங்களை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளன. இந்த நிலையில் நடுவண் ஆட்சி நிறைவேற்றிய சட்டத்தை ஏற்க மறுக்கும் மாநிலங்கள் மீது திணிப்பது கூட்டாட்சி தத்துவத்தையும் மாநிலங்களின் குடியாட்சி உரிமையையும் பறிக்கும் ஆபத்தும் இதில் அடங்கியிருக்கிறது.

பாரதிய ஜனதா கட்சி, 1989, 1991, 1998, 1999, 2004 தேர்தல் அறிக்கையில் குடியுரிமைப் பதிவேட்டை உருவாக்குவோம் என்று தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையிலும் அசாம் மாநிலத்தைப் போல் அனைத்து மாநிலங்களிலும் நிறைவேற்றுவோம் என்று கூறியிருந்தது. இப்போது தேசிய குடியுரிமைப் பதிவேடு குறித்து விவாதிக்கவில்லை என்று மோடி கூறுகிறார். ஆனாலும் தேசிய மக்கள் தொகை பதிவேடு தயாரிக்க அமைச்சரவை அவசரமாகக் கூடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. குடியுரிமைப் பதிவேட்டுக்கும் மக்கள் தொகை பதிவேட்டுக்கும் உள்ள தொடர்புகளைப் பிரித்து பார்க்க முடியாது. குடியுரிமைப் பதிவேட்டை தயாரிப்பதற்கான முன்னேற்பாடுதான் - மக்கள் தொகைப் பதிவேடு தயாரிப்பாகும். ஏற்கனவே மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்ற ‘சென்சஸ்’ எடுக்கப்பட்டு வரும் நிலையில் மக்கள் தொகைப் பதிவேட்டுக்கான தேவை குறித்து கேள்வி எழுகிறது. குடியுரிமை திருத்தச் சட்டத்தில் ஈழத் தமிழர்களையும், இஸ்லாமியர்களையும் ஒதுக்கி வைத்துள்ள மத்திய அரசு மீது, தமிழ்நாட்டு மக்கள் சந்தேகமும் அச்சமும் அடைகிறார்கள். குறிப்பாக அசாமில் குடியுரிமைப் பதிவேடு தயாரிக்கும் முயற்சி கடும் தோல்வி அடைந்துள்ளது.

இந்த நிலையில் பெரியார் மண்ணாகிய தமிழ்நாடு தான் இந்தியாவை ‘இந்து இராஷ்டிர மாக்கும்’ முயற்சியை முறியடிக்கத் தீவிரமாகப் போராட்டக் களத்தில் இறங்கியுள்ளது.





**மனித சங்கிலி**

மயிலாப்பூர் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் முன்முயற்சி எடுத்து மக்கள் ஒற்றுமை இயக்கம் ஒன்றை விசாலாட்சித் தோட்டப் பகுதியில் உருவாக்கி குடியுரிமைச் சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தியும் தமிழக சட்டமன்றத்தில் எதிர்ப்பு தீர்மானம் நிறைவேற்றக் கோரியும் கடந்த மார்ச் ஒன்றாம் தேதி (1.3.2020) காலை 11 மணியளவில் மனித சங்கிலி போராட்டம் நடத்தினர். 45 நிமிட நேரம் மனித சங்கிலியில் மக்கள் கைகோர்த்து குடியுரிமை சட்டங்களை திரும்பப் பெற வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். சட்டத்தின் ஆபத்துகளை விளக்கியும், கணக்கெடுப்புகளை புறக்கணிக்கக் கோரியும் வலியுறுத்தும் துண்டறிக்கைகளை மக்களிடம் வீடு வீடாகச் சென்று வழங்கினர்.

**(துண்டறிக்கை 4ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது)**

## பெரியாரிய போராளி ஆசிட் தியாகராஜன் முடிவெய்தினார்



*பெரியாரிய போராளி ஆசிட் தியாகராஜன் 94ஆம் வயதில் பிப்.26, 2020 அன்று தஞ்சையில் அவரது இல்லத்தில் முடிவெய்தினார். இயக்கத்தில் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாமல் வெளிச்சத்துக்கு வராமல் செயல்பட்ட தன்மானப் போராளி. பெரியாரை இழித்து பழித்துப் பேசியவர்களை ‘பகத்சிங்காக’ மாறி தண்டனை வழங்கியவர். 1957 ஆம் ஆண்டு பெரியார் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடரப்பட்டது. அரசு வழக்கறிஞரான சீனிவாச்சாரி என்ற பார்ப்பனர், பெரியாரை ‘ராமசாமி நாய்க்கர்’ என்று நீதிமன்றத்தில் குறிப்பிட்டதைக் கேட்டு ஆத்திரமடைந்து, அவர் மீது ‘ஆசிட்’ வீசியதாக கைது செய்யப்பட்டவர். வன்முறைகளிலும் பழிவாங்குதலிலும் பெரியார் இயக்கத்துக்கு உடன்பாடு இல்லை என்றாலும், இயக்கத்தோடு தொடர்புபடுத்திக் கொள்ளாமல் பெரியார் உணர்வாளர்களாகப் பல போராளிகள் இயக்கத்துக்கு வெளியே செயல்பட்டிருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் ‘ஆசிட்’ தியாகராஜன்.*

*செய்தி அறிந்த நாகை மாவட்ட கழகத் தோழர்கள் ஆசிட் தியாகராஜனுக்கு வீரவணக்கம் செலுத்தினர்.*

*தஞ்சை மாவட்ட கழகத் தலைவர் சாக்கோட்டை இளங்கோவன், தஞ்சை மாவட்ட அமைப்பாளர் பேராவூரணி திருவேங்கடம், கரிகாலன், சோலை மாரியப்பன், பசு. கவுதமன் உள்ளிட்ட தோழர்களும், நாகை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மகேஷ், இளையராஜா, செந்தில், நாஞ்சில் சங்கர், ஜாகிர் உசேன், விஜயராகவன், கார்த்தி, பீமாராவ், பாண்டியன் உள்ளிட்ட தோழர்களும் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர். அங்கு நடைபெற்ற வீரவணக்க கூட்டத்தில் சாக்கோட்டை இளங்கோவன், ஆசிட் தியாகராஜன் பற்றி தோழர்களுக்கு எடுத்துக் கூறி வீரவணக்கம் செலுத்தினார்.*

*(2007-மே 19 அன்று தஞ்சையில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய ஜாதி ஒழிப்பு மாநாட்டில் ஆசிட் தியாகராஜன் நிகழ்த்திய உரை - உள்ளே)*

# 2007இல் தஞ்சை ஜாதி ஒழிப்பு மாநாட்டில் ஆசிட் தியாகராசன் நிகழ்த்திய உரை

*2007 மே 19 அன்று பெரியார் திராவிடர் கழகம் சார்பில் தஞ்சாவூரில் நடைபெற்ற ஜாதி ஒழிப்பு மாநாட்டில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற ஆசிட் தியாகராசன் ஆற்றிய உரை.*



“நான் அதிகம் பேச முன்வரவில்லை. உண்மையைச் சொன்னால் - எனது 78 வயதில் நான் ஏறியுள்ள முதல் மேடை இது தான். புரட்சிகர இயக்கங்களுக்கு தனித் தனிப் படைகள் தேவை. நீங்கள் பிரச்சாரப் பீரங்கிகள்; பிரச்சாரப் படை. நான் தீவிரவாதத்தில் தான் இருப்பேன் (கைதட்டல்) . பெரியார் அதிகாரபூர்வமாக அறிவிக்கும் போராட்டங்களில் நான் கலந்து கொள்வது இல்லை. நான் கருப்புச் சட்டையும் போடமாட்டேன். என்னுடைய நடவடிக்கைகளால் கழகம் பாதிக்கப்பட்டுவிடக் கூடாது என்று கருதுபவன். என்னுடைய போராட்டங்களை நான் தனிப்பட்ட முறையில் எனக்கு நானே பொறுப் பாக்கிக் கொண்டுதான் நடத்துவேன். சுருக்கமாகச் சொல்கிறேன்.

பெரியாரின் பிள்ளையார் உடைப்புப் போராட்டத்துக்கு என்ன காரணம் என்பது எனக்குத் தெரியும். ஆனால் விபூதி வீர முத்து என்பவன், பெரியார் படத்தை செருப்பால் அடித்து ஊர்வலம் போவதாகச் சொன்னான். திருச்சி திராவிடர் கழகத் தலைவர் டி.டி.வீரப்பா என்ற தோழரும், விபூதி வீரமுத்து பக்கம் போக வேண்டாம் என்று கண்டிப்பாக உத்தரவிட்டார், அறிக்கையும் விட்டார். நான் வீட்டில் இருந்து கொண்டு, எனது சகாக்களை அழைத்துப் பேசினேன். டி.டி.வீரப்பா, கட்சியின் கட்டுப்பாடு படி நடக்கட்டும். ஆனால், நாம் நமது ‘சட்டத்திட்டப்படி’ அதை சந்திப்போம் என்று கலந்து பேசினேன். அன்று எனக்கு டைபாயிடு காய்ச்சலே வந்துட்டுதுங்க. கடும் காய்ச்சலில் கிடந்த நான் கண்விழித்துப் பார்த்தபோது - என் கையில் கத்தி இருந்தது.

அப்போது மணி மாலை 7. அய்யோ, இந்நேரம் பெரியார் படத்தை செருப்பால் அடித்திருப்பானேயென்று, தலைதெறிக்க ஓடினேன்.

திருச்சி டவுன் ஹால் நோக்கி, கூட்டத்தைக் கலைக்க, போலீசார் தடியடி, கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். ஆனால், விபூதி வீரமுத்துவிடம் எத்தனை பேர் இருந்தார்கள் தெரியுமா? 25 பேர் மட்டும்தான். ஆனால் போலீஸ் பட்டாளம் அதிகமாக இருந்தது. நம்முடைய தோழர்கள் சாலையின் மறு பக்கத்தில் நின்று கொண்டு, பயங்கரமாக எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். என்னுடைய சகாக்களுக்கு நான் செய்ய வேண்டியதை எல்லாம் முன் கூட்டியே சொல்லி விட்டேன்; நான் சோடா விற்பவ னாக மாறு வேடத்தில் போலீஸ் தடையை மீறி உள்ளே நுழைந்துவிடுவேன்; நான் சைகை காட்டியதும், நீங்கள் கற்களை வீச வேண்டும்; கல் விழுந்தவுடன் நான் செய்ய வேண்டியதை செய்வேன் என்று கூறி விட்டேன்; அப்போதெல்லாம் என்னிடம் காசு கிடையாது; ஒருவரிடம் கடன் வாங்கி, அதில் ‘சோடா கிரேடு’ களை வாங்கி, அதைத் தூக்கிக் கொண்டு, தலையில் துண்டு கட்டிக் கொண்டு, சோடா விற்பவனைப் போல் உள்ளே நுழைந்தேன். விபூதி வீரமுத்துவின் ஆள் கண்ணன் என்பவர், யார் நீ என்று கேட்டார். தலைவருக்கு சோடா தர வந்திருக்கிறேன் என்றேன்; உள்ளே போனதும், விபூதி வீரமுத்துவை நோக்கி எனது தோழர்கள் மலத்தை வீசினார்கள்; நான் டவுன் ஹால் கதவை உடைத்து, டவுன் ஹால் கோபுரத்தின் மீது ஏறி விட்டேன்; விபூதி வீரமுத்து என்பவன் பெரியார் ரஷ்யாவுக்குப் போன போது எடுத்த படத்தை ஒரு மூட்டையில் ஒட்டி, அந்தப் படத்தை செருப்பால் அடிக்கத் திட்டமிட்டிருந்தான். ‘வெள்ளைக்காரனுக்கு காட்டிக் கொடுத்த நாயை செருப்பால் அடிக்கிறேன்’ என்று கூறி - பெரிய செருப்பை, விபூதி வீரமுத்து தூக்கினான். அவ்வளவுதான், டவுன் ஹால் கோபுரத்திலிருந்து சோடா பாட்டிலையும், கற்களையும் விபூதி வீரமுத்து தலையை இலக்கு வைத்து அடித்தேன்; முதல் அடியில் அவன் தலை கிழிந்தது. பெரியார் படம் கீழே விழுந்தது. என்னைக் கெட்ட வார்த்தை பேசி திட்டினான்.

மீண்டும் விட்டேன் எனது ‘அஸ்திரத்தை’; பிறகு 7 பேர் மொட்டை அடித்துக் கொண்டு பெரியார் படத்தை வைத்துப் பாடை கட்டி தூக்கி வந்தனர். அத்தனை பேரையும் இலக்கு வைத்து அஸ்திரத்தை வீசினேன்; அப்படியே ஓட்டம் பிடிச்சானுங்க; மேலே இருந்த என்னைப் பார்த்து, போலீசார் வெறிக் கூச்சல் போட்டு, என்னை சுற்றி வளைக்க வந்தாங்க; நான் மேலே இருந்து அப்படியே கீழே குதித்தேன்; எனக்கும் சில ‘ஸ்டண்ட்’ வேலைகள் தெரியும்.

ஆனால் உங்களை எல்லாம் ஒன்று கேட்டுக் கொள்கிறேன்; யாரும், டி.வி., சினிமாக்களைப் பார்க்காதீங்க. அதெல்லாம் ‘விசிலடிச்சான் குஞ்சு’ சமாச்சாரம்; நடைமுறைக்கு வாங்க. நான் ஃபால் ஆப் பெர்லின், பகத்சிங், உலக யுத்தத்தில் - உடம்பில் குண்டைக் கட்டிக் கொண்டு கப்பலைத் தகர்ப்பானே, அது போன்ற படங்களைத்தான் பார்த்திருக்கிறேன். கூட்டத்தையே கலைத்தேன். என்னுடைய திட்டம் முழு வெற்றிப் பெற்றது. என்னுடைய வாழ்நாளில் எவ்வளவோ போராட்டம் செய்திருக்கிறேன். சொல்ல நேரமில்லை.

பெரியாருக்கு 3 ஆண்டு தண்டனை தரப்பட்டபோது, முதல் நாளே என்னைக் கைது செய்து விட்டார்கள். கைது செய்த என்னை அடுத்த நாள் நீதிமன்றம் கொண்டு வந்தார்கள். இரண்டாவது மாஜிஸ்திரேட் நீதிமன்றம் முன் என்னை நிறுத்தி வைத்திருந்தார்கள். மாவட்ட நீதிமன்றத்தில் அய்யாவுக்கு 3 வருட தண்டனை கொடுத்து, மற்றொரு பக்கம் அய்யாவைக் கொண்டு போகிறார்கள். தண்டனை அறிவித்தவுடன் எனது சகாக்கள் கடும் அமளியில் இறங்கி விட்டார்கள். அய்யாவுக்குத் தண்டனை தந்த பிறகு என்னால் சும்மா இருக்க முடியுங்களா? சீனிவாசாச்சாரி என்ற வெறி பிடித்த அய்யங்கார் பார்ப்பனன்தான் அரசு வழக்கறிஞர். நமது இனத்துக்கு மிகப் பெரும் கேடு செய்தவன். அவனது கடந்த கால சரித்திரம் முழுமை யும் நான் தெரிந்து கொண்டேன். அதனால் நான் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன்.

என்னிடம் கழக முக்கியஸ்தர்கள் எல்லாம் வந்து, நீங்கள் தயவுசெய்து பொறுமையாக இருங்கள் என்று மன்றாடி கேட்டுக் கொண்டார் கள். ஜனவரி 26 ஆம் தேதி அய்யாவை விட்டு விடுவார்கள் என்றார்கள். அது வரை பொறுமையாகக் காத்திருந்தேன். ஜன.26 மாலை ஒரு முடிவுக்கு வந்தேன்.

என்னுடைய அருமையான தோழர் சின்னச்சாமி. ஒரு பெரிய திட்டத்துக்கு தயாராகி நின்ற எங்களிடம் இருந்த பணம் எவ்வளவு தெரியுமா? நான்கு அணா. வெறும் நான்கு அணா தான்! ரேடியோ செய்தி கேட்டேன். பெரியார் விடுதலைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. குடியரசு நாள் நிகழ்ச்சியில், அரசு வழக்கறிஞர் கலந்து கொள்கிறார் என்ற சேதி கிடைத்தது. என்னுடைய நண்பன் சின்னச்சாமியிடம் கூறினேன். நான் முடிவு செய்து விட்டேன்; நீ போய்விடு என்று கூறினேன். பெரியார் வாழ்க என்று கூறி இருவரும் கை குலுக்கினோம்.

என்னுடைய நண்பன் சின்னச்சாமி பற்றி சொல்ல வேண்டும். அற்புதமான நண்பன். பீடி சுற்றித்தான் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். ஒரு நாள் பீடி சுற்றினால் 75 காசு கிடைக்கும். அதை வைத்துத்தான் குடும்பம் நடத்த வேண்டிய நிலை. நான் அழைக்கும்போது, பீடி சுற்றுவதை அப்படியே நிறுத்திவிட்டு என்னோடு வந்துவிடுவான். என்னால் மறக்கவே முடியாத காட்சிகள் அவை. அந்த நண்பன் சின்னச்சாமி, இப்போது காச நோய்க்கு உள்ளாகி மருந்து வாங்குவதற்குக்கூட காசு இல்லாமல் இருக்கிறான்.

அப்போது, சின்னச்சாமி, என்னைத் தனியே விட்டுப் போக மறுத்துவிட்டான். நானும் சேர்ந்து கொள்கிறேன் என்றான். “வேண்டாம் சின்னச்சாமி, தயவு செய்து நீ போய்விடு. என்னுடைய தாயை மறந்துவிட்டு நான் இந்த இடத்தில் நிற்கிறேன்; எனக்கு அய்யா தான் முக்கியம்” என்று சொன்னேன்.

சீனிவாசாச்சாரி குடியரசு நாள் விழாவில் பங்கேற்றுவிட்டு வந்தான். போலீசுக்கு எதிரேயே போய் கழுத்தைப் பிடித்து சுழற்றி முகத்தில் ‘ராஸ்கல்’ என்று கூறி ‘ஆசிட்’ வீசினேன். அவன் கீழே விழும்போது 8 மணி சங்கு ஊதியது. தோளிலும், முகத்திலும் குத்தினேன். 300 பேர் விரட்டி வந்தனர். முடியுமா? என்னிடம் யாரும் நெருங்க முடியவில்லை. அதற்குப் பிறகு காவல்நிலையத்தில் - என்னை அழைத்துப் போய் விசாரித்தார்கள். இன்ஸ்பெக்டர் என்னை மிகவும் மதித்து சமமாக உட்கார வைத்து தோளில் கைபோட்டுப் பேசினார். அப்போது என்னிடம் கேட்டார். “எவ்வளவோ பெரியார் தொண்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இல்லாத கவலை உனக்கு மட்டும் ஏன்? நீ மட்டும் ஏன் இத்தகைய தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறாய்?” என்று கேட்டார், நான் சொன்னேன்.

“நீங்கள் சேர்வை சமூகத்தைச் சார்ந்தவர்; நான் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவன்; என்னை சமமாக உட்கார வைத்து, நீங்கள் எனது தோளில் கை போட்டுப் பேசுகிறீர்கள். 25 ஆண்டுகளுக்கு முன், எனது சமூகம் தீண்டப்படாத சமூகம்; இன்று எனக்கு இந்த சம உரிமையைப் பெற்றுத் தந்தது பெரியார். அந்த உணர்வுதான் என்னை இயக்குகிறது. ஏதோ ஒரு நாள் - இதே திருச்சியில் பெரியாரின் இறுதி ஊர்வலம் போகும். அப்போது எல்லோரும் கண்ணீர் விட்டு அழுவார்கள்; அப்போது நான் மட்டும் அழமாட்டேன். காரணம், பெரியாரை தண்டித்தவர்களுக்கு எல்லாம், சரியான பாடம் புகட்டி விட்டேன் என்ற மனநிறைவில் நான் மகிழ்ந்து நிற்பேன்” என்று கூறி விட்டு, நான் குலுங்கி குலுங்கி அழுதேன். எனக்கு முன்னால் புகைப்பிடித்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர், சிகரெட்டை தூக்கி வீசி விட்டு அவரும் கண்ணீர் விட்டார்.

சுருக்கமாகச் சொல்கிறேன். உங்களிடம் கழகத்தின் பணம் இருக்கிறதா? அய்யா தேடித் தந்த பணம் உங்களிடம் இருக்கிறதா? சொல்லுங்க. உங்களிடம் எதுவும் இல்லை; நீங்கள் உணர்வுகளை வைச்சிருக்கீங்க; பணம் இருந்து என்ன பயன்? செயல் தான் முக்கியம். அப்படி செயல் படுகிற கூட்டம் தான் நீங்கள். இங்கே திரண்டிருக்கிறீர்கள். பணம் யாரிடமோ இருக்கிறது; ஆனால் கொள்கை உங்களிடம் தான் இருக்கிறது. (கைதட்டல்) நிறைய பேச வேண்டியிருக்கு; என்னால் இதற்கு மேல் பேச முடியவில்லை; மன்னிக்கவும்.

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ இதழ், மே 24, 2007.**

## சேலம் ஊர்வலம் பற்றிய பொய்யுரை

## நடிகர் ரஜினிகாந்த் பேச்சை ‘துக்ளக்’ பத்திரிகையே வெட்டி விட்டது




1971இல் சேலத்தில் பெரியார் நடத்திய மூட நம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் ஸ்ரீராமமூர்த்தி-சீதையின் உருவங்கள் நிர்வாணமாக, செருப்பு மாலை போடப்பட்டு எடுத்து வந்ததாக ‘துக்ளக்’ 50ஆம் ஆண்டு விழாவில் ‘ஆன்மீக’ சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் பேசினார். அப்படிப் பேசியது உண்மைக்கு மாறான தகவல் என்று திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட பெரியார் இயக்கங்கள் எதிர்ப்பு தெரிவித்தன.

திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள், ரஜினிகாந்த் வீட்டை முற்றுகையிட்டுப் போராட்டத்தை நடத்தி கைதானார்கள். தமிழ்நாட்டின் பல்வேறு அரசியல் கட்சிகளும் ரஜினிகாந்த் பேச்சைக் கண்டித்தன. பிறகு செய்தியாளர்களை சந்தித்த நடிகர் ரஜினி, தான் பேசியதற்கு ஆதாரமாக அதற்கு 10 ஆண்டுகளுக்கு முன் ‘அவுட்லுக்’ பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் அவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது என்றும், தாம் பேசியதற்கு வருத்தமோ, மன்னிப்போ கேட்கப் போவது இல்லை என்றும் பொங்கினார்.

‘துக்ளக்’ ஆசிரியர் குருமூர்த்தி, ரஜினி பேசியது உண்மைதான் என்று ‘சத்தியம்’ செய்தார். 1971ஆம் ஆண்டில் ‘துக்ளக்’ வெளியிட்ட சேலம் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்தில் எடுத்து வரப்பட்ட படங்களை மீண்டும் ‘துக்ளக்’கில் வெளி யிட்டார்கள். அந்தப் படங்களிலும் இராமன், சீதை செருப்பு மாலை போடப்பட்டிருப்பது போன்ற காட்சிகள் இல்லை.

‘துக்ளக்’ சோவின் ‘வீரதீர நெஞ்சுறுதி’யைப் பாராட்ட ரஜினிக்கு பாடம் எடுத்த குருமூர்த்திகள், சொல்லிக் கொடுத்த கதை பொய்யானது என்பது இப்போது மீண்டும் உறுதியாகிவிட்டது. இவ்வாரம் வெளி வந்த 4.3.2020 ‘துக்ளக்’ பத்திரிகையில் ரஜினியின் ‘துக்ளக்’ விழா பேச்சு வெளி வந்திருக்கிறது. அதில், “ஸ்ரீராமமூர்த்தி சிலைகள் நிர்வாணமாக செருப்பு மாலை போடப்பட்டு எடுத்து வரப்பட்டது” என்ற வாசகங்களை ‘துக்ளக்’ பத்திரிகையே வெட்டி விட்டது.

“1971இல் சேலத்தில் பெரியார் அவர்கள் ஸ்ரீராமச்சந்திர மூர்த்தியையும் சீதையையும் அவமரியாதையாகச் சித்தரித்து எடுத்துக் கொண்டு ஒரு ஊர்வலம் போனார்கள்” என்ற ஒற்றை வரியோடு ரஜினி பேச்சை முடித்துக் கொண்டு விட்டது, ‘துக்ளக்’.

‘நிர்வாணம்’ – ‘செருப்புமாலை’ என்ற வார்த்தைகள் காணாமல் போய்விட்டன. குருமூர்த்தியும் ரஜினியும் பார்ப்பன ‘கோயபல்சு’களும் அவிழ்த்துவிட்ட பொய் அம்பலமாகி அவர்களே பேசியதை திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டார்கள்.

## பேராவூரணி கூட்டத்தில் கொளத்தூர் மணி விளக்கம்

# தேசிய மக்கள் பதிவேட்டின் (என்.பி.ஆர்.) ஆபத்துகள்

***தேசிய மக்கள் பதிவேடு, தேசிய குடியுரிமைப் பதிவேடு இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல, அனைத்துப் பிரிவினரையும் பாதிக்கும்; எளிய குடிமக்கள் தலையில் தங்களை நிரூபித்துக் கொள்ளும் சுமையை அழுத்துகிறது மத்திய அரசு என்றார் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.***

*பிப். 17, 2020 அன்று பேராவூரணியில் நடந்த பொதுக் கூட்டத்தில் கொளத்தூர் மணி ஆற்றிய உரை:*

மக்கள் தொகை கணக்கெடுப்பில் (census) நாம் சொல்வதை அவர்கள் எழுதிக் கொள்வார்கள். எம்.ஜி.ஆரிடம் ஒருமுறை மதம் என்னவென்று சென்சசுக்காக கேட்டார்கள்; அவர் ‘திராவிட மதம்’ என்று கூறினார். எம்.ஜி.ஆர். இந்து மதம் என்று கூறவில்லை. ஆனால் அப்படி ஒரு மதம் உண்டா என்று கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது; மக்கள் சொல்வதை எழுதிக் கொள்ள வேண்டும். அதற்கென உள்ள கையேடு அப்படித்தான் கூறுகிறது. அதை எழுதிக் கொண்டார்கள். மக்கள் என்ன கூறுகிறார்களோ அதை எழுதிக் கொள்வார்கள். எம்.ஜி.ஆர்-யை திராவிட மதம் என்றுதான் எழுதினார்கள். அதுதான் மக்கள் தொகை கணக்கெடுப்பு.

ஆனால் தற்போது இவர்கள் கொண்டு வரப்போகும் தேசிய மக்கள் பதிவேட்டில் தவறான தகவல்களைக் கூறினால் தண்டனை தரப்படும். உள்ள செய்திகளை மட்டும் கூற வேண்டும். சரி சொல்லி விடுகிறோம், ஆனால் உள்ளூர் அளவில் ஒரு அதிகாரி இருப்பார் அவர், சந்தேகமானவர்களை சந்தேகமானவர் என்று எழுதி வைக்கலாம். அவர்களுக்குத் தான் சிக்கல். அதை இஸ்லாமியர்களுக்கு மட்டும் போடுவார்கள் என்று கூறிவிட முடியாது. குடியுரிமை திருத்தச் சட்டம் வேண்டுமானால் இஸ்லாமியர்களைப் பிரித்து பார்த்தது என்று சொல்லலாம். ஆனால் தேசிய மக்கள் பதிவேட்டில் அந்தக் கணக்குக் கிடையாது. D என்று எழுதினால் (doubtful) சிக்கல்தான். அதைத் தவிர்க்க என்ன செய்ய வேண்டும்? ஆவணங்களைக் கொடுக்க வேண்டும். ஆவணங்களைக் கொடுப்பது இஸ்லாமியர்கள் மட்டுமா? அனைவரும்தான் கொடுக்க வேண்டும். அதில் சந்தேகம் வந்தால் நமது பிறப்புச் சான்றிதழைக் கேட்கிறார்கள். மோடியே இரண்டு பிறப்புச் சான்றிதழ் வைத்துள்ளார். இரண்டு பிறந்தநாள் அவருக்கு. 12ஆம் வகுப்புப் படித்த விஸ்நகர், எம்.என். கல்லூரியில் 29.08.1949 இல் பிறந்தவர் என்று சான்றிதழில் உள்ளது. தற்போது பாஜக இணைய தளத்தில் 17.09.1950இல் பிறந்தார் என்று உள்ளது. வேறொருவர் ஆட்சியில் இருந்தால். அவருடைய சான்றிதழ்களைக் காட்டினாலே குடியுரிமை மோடிக்கு இல்லையென்று கூறி விடுவார்கள். பிறப்பு, இறப்புப் பதிவு செய்ய வேண்டும் என்ற சட்டமே 1969இல் தான் கொண்டு வரப்பட்டது. அதற்கு பின்னர்தான் பதிவுகள் இருக்கின்றன. 1969இல் சட்டம் வந்த தென்றால் தற்போது 50 வயதிற்குட்பட்டோருக்கு மட்டும்தான் பிறப்புச் சான்றிதழ்கள் இருக்கும். என்னை சந்தேகநபர் என்று குறித்து வைத்தால் என்னுடைய தந்தையின் பிறப்புச் சான்றிதழை நான் எப்படி காட்ட முடியும் ? ஒருவரை இந்தியர் என்று காட்ட வேண்டும் அதற்கு தாய் அல்லது தந்தையின் சான்றிதழ் வேண்டும். அதில் ஒரு திருத்தம் காங்கிரசால் கொண்டுவரப்பட்டது பெற்றோரில் ஒருவர். அதற்கு முன் வரை தந்தை சான்றிதழை மட்டுமே காட்ட வேண்டும் என்று இருந்தது.

2004ஆம் ஆண்டுக்குப் பின்னர் பெற்றோரில் ஒருவர் இந்தியர் என்பதற்கான சான்றிதழ் மட்டுமல்ல; மற்றொருவர் சட்டவிரோதமாகக் குடியேறியவர் இல்லை என்பதற்கான ஆதாரத்தையும் காட்டியாக வேண்டும். இந்த சட்டத்தை எதிர்த்து அய்.ஏ.எஸ் அதிகாரிகள் வெளியே வருகிறார்கள். கோபி கண்ணன் கேரளாவைச் சேர்ந்த அதிகாரி தனது பதவியை விட்டு வெளி வருகிறார். தமிழகத்தைச் சேர்ந்த குஜராத்தில் மாவட்ட ஆட்சியராக இருந்த சசிகாந்த் செந்தில், இந்த சட்டத்தைப் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியவில்லை என்று பதவியை விட்டு வெளியே வந்துவிட்டார். இருவரும் இந்துக்கள் என்று சொல்லப்பட்டவர்கள்தான்; இஸ்லாமியர்கள் இல்லை. ஒரு அய்.ஏ.எஸ் அதிகாரியாக நான் இந்த சட்டத்தை நடைமுறைப் படுத்துவதா? அரசினர் இந்த சட்டத்தின் மூலம் மக்களை அசிங்கப்படுத்துகிறார்கள், அவமானப் படுத்துகிறார்கள், அந்நியர்களாக்க முயற்சிக்கிறார்கள் என்று கூறிவிட்டு பதவியை விட்டு வெளியேறியுள்ளனர்.

எல்லோரும் ஆதாரம் கொடுத்தாக வேண்டும் என்பதுதான் சட்டம். D என்று எழுதிய அதிகாரியிடம் சான்றிதழ் கொடுக்க வேண்டும். அவர் சரி பார்த்து 90 நாட்கள் அல்லது தேவையேற்பட்டால் இன்னும் அதிக காலம் எடுத்துக் கொண்டு அவர் அதை பரிசீலித்து உங்களை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது நிராகரிக்கலாம். ஏற்றுக்கொண்டால் பட்டியலை வெளியிட வேண்டும். அந்த பட்டியலில் உள்ளவர்களை யார் வேண்டுமானால் ஆட்சேபிக்கலாம். அப்படி மற்றொருவர் நமது சான்றிதழ்கள் தவறு என்று கூறிவிட்டால் நாம் மீண்டும் மேல் முறையீட்டிற்கு செல்ல வேண்டும். அவரிடம்



**1996 ஆம் ஆண்டு தேர்தலின் போதே பாரதிய ஜனதா கட்சியின் தேசியக் குழு போபாலில் கூடியது, அதில் குடியுரிமைப் பதிவேட்டை வலியுறுத்தி தீர்மானங்கள் போடப்பட்டன. அதை தேர்தல் அறிக்கையாகவே கொடுத்தார்கள்.**

நாம் 30 நாட்களுக்குள் கூடுதல் ஆதரங்களை, சான்றிதழ்களைக் கொடுக்க வேண்டும் அந்த அதிகாரி ஆலோசித்து 90 நாட்களில் தீர்ப்பு கூறுவார். அதிலும் ஏற்றுக்கொண்டால் சரி. ஏற்றுக் கொள்ளாவிட்டால் மீண்டும் ஒரு மேல் முறையீடு செல்ல வேண்டும். சரியான நேரப்படி பார்த்தால் மொத்தம் 300 நாட்கள். எந்த வேலையும் செய்யாமல் நமது குடியுரிமையை நிரூபிக்க செலவழித்தாக வேண்டும். அதுமட்டுமில்லை சான்றிதழ்களின் விலையும் ஏறிக் கொண்டே போகும். இப்போது பிறப்புச் சான்றிதழ் 500 என்றால் 5000 ஆகும். ஏனென்றால் ஈழத்தில் போர் நடைபெற்ற போது குழந்தைப் போராளிகள் என்ற குற்றச் சாட்டைப் புலிகள் மீது கூறினார்கள் உயர்ஜாதிப் பணக்காரர்கள். அந்த ஊர் அரசுப் பிரதிநிதியிடம் சென்று 13 வயது என்று சான்றிதழ் கொடுக்கச் சொன்னார்கள். அதற்கு 50000 வரை பணம் கொடுக்கவும் செய்தார்கள். அய்.நா-வில் எனது குழந்தைகளைப் போராளிகள் ஆக்கிவிட்டார்கள் என்று பெரிய ஜாதி பணக்காரர்கள் செய்தார்கள். இதே போல் நாமும் பணம் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டியதுதான். இப்போது ஒரு ஆய்வு நிறுவனம் கூறியிருக்கிறது, “அசாமில் NRC-ஆல் அரசுக்கு ஆன செலவை விட மக்களுக்கு ஆன செலவு தான் இரண்டு மடங்கு அதிகமாக இருந்தது’ என்று. 1.600 கோடி அரசுக்கு செலவானது ஆனால் மக்கள் அதைவிட இரண்டு மடங்கு அதிகமாக செலவழித் துள்ளனர். ஆறு வருடம் கணக்கெடுக்க எடுத்துக் கொண்டார்கள். 52 ஆயிரம் பேர் இதற்காக வேலை செய்தார்கள். இதற்கு நாம் எவ்வளவு செலவு செய்வது? செலவு மட்டுமல்லாமல் ஓராண்டாக எந்த வேலையும் இல்லாமல் அலைய வேண்டும். அப்படி செய்தாலும் உள்ளூர்காரர்கள் மறுக்கலாம். சிறியதாக பொதுக் கூட்டம் நாம் போட்டாலே எதிர்ப்பு மனுவை காவல் துறையிடம் கொடுப்பார்கள். காவல் துறையும் ஏற்றுக்கொண்டு எதிர்ப்பு மனு வந்துள்ளது, கூட்டத்தை நடத்த வேண்டாம் என்று நம்மிடம் கூறுவார்கள். நாம் கூறுவதை காவல் துறை கேட்பதில்லை. தற்போது பழனிச்சாமிஜி ஆட்சியில் இதுபோன்றுதான் நடந்து கொண்டிருக்கிறது. இதே போல் ஏதாவது மனு கொடுத்துக் கொண்டிருப்பார்கள்; அந்த மனுவிற்கெல்லாம் நாம் பதில் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். இஸ்லாமியர்களுக்கு மட்டுமா கொடுப்பார்கள்? அனைவருக்கும் தான் கொடுப்பார்கள். யார் யாரெல்லாம் அவர்கள் கருத்தை எதிர்ப்பவர்களோ, ஏற்காதவர்களோ அவர்களுக்கு எதிராக மனு கொடுப்பார்கள்.

கல்புர்கி, கோவிந்த் பன்சாரே, நரேந்திர தபோல்கர், கவுரி லங்கேஷ் இவர்களெல்லாம் இஸ்லாமியர்களா? பிறப்பால் இந்துக்கள் தானே! பகுத்தறிவாளர்கள் என்று வேண்டுமானால் கூறலாம். இவர்களையே கொன்றவர்கள் நமக்கு எதிராக மனுவா கொடுக்க மாட்டார்கள்? நமக்கு எதிராக மனு கொடுப்பார்கள், நாம் அலைந்து கொண்டே இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சிக்கல்களை நாம் கவனிக்க வேண்டும்.

1996 ஆம் ஆண்டு தேர்தலின் போதே பாரதிய ஜனதா கட்சியின் தேசியக் குழு போபாலில் கூடியது, அதில் மூன்று தீர்மானங்கள் போடப்பட்டன. அதில், ‘சட்ட விரோதமாக வந்தடைந்தவர்களை கண்டறிய வேண்டும், அவர்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும், பின் அவர்களை நாடு கடத்த வேண்டும், (detection, deletion, deportation) ஆகிய தீர்மானத்தை நிறைவேற்றி 1996ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையாகவே கொடுத்தார்கள். தற்போது கொண்டுவரப்பட்டதல்ல இவை. இப்போது பெரும்பான்மை வந்ததால் செய்து கொண்டிருக்கிறார்கள். நாம் அவர்களைவிட பலமடங்கு பெரும்பான்மையினராக இருக்கிறோம். பார்ப்பானும் பார்ப்பன அடிமையும் ஆர்.எஸ்.எஸ்.இல் இருக்கிறான். ஏமாந்த கூட்டமும் இருக்கலாம். ஆனால் உழைக்கும் மக்கள், சூத்திர, பஞ்சமர்கள், இஸ்லாமிய, கிருத்துவர்கள் எண்ணிக்கையில் அவர்களைவிட பல ஆயிரம் மடங்கு அதிகமாக இருக்கிறோம் அவர்களின் இந்த சூழச்சிகளை ஏன் முறியடிக்க முடியாது என்பதற்குதான் இந்த போராட்டங்களை நாம் முன்னெடுத்துக் கொண்டிருக்கிறோம். பாரதிய ஜனதா கட்சி ஆள்கின்ற மாநிலங்களில் நடந்த போராட்டங்களில் மட்டும்தான் துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன. வேறு எங்கேயும் துப்பாக்கி சூடு நடத்தப்படவில்லை. தற்போதுதான் தமிழ்நாட்டில் தடியடி தொடங்கியிருக்கிறது. இங்கே யார் ஆட்சி என்பதை நாம் முடிவு செய்து கொள்ள வேண்டும். நாம் வீறுகொண்டு வீதிக்கு வந்துள்ளோம், போராட வந்துள்ளோம் ஆனால் எதிர்ப்பாளர்களாக இஸ்லாமியர்களை மட்டும்தான் அரசாங்கம் கணக்கில் எடுத்துக் கொள்ளும். ஆனால் இதை எதிர்ப்பவர்கள் வீதிக்கு வர முடியமல் இருந்தால் அவர்களை ஆதரவாளர்கள் என்றுதான் அரசாங்கம் எடுத்துக் கொள்ளும். எனவே நமது எதிர்ப்பை எந்த வகையிலாவது காட்டுவோம், இப்போது கையெழுத்து இயக்கம் நடத்தினார்கள் கையெழுத்து போடுவோம், அரசாங்கத்திற்கு கடிதம் எழுதலாம், நாமெல்லாம் எதிராக இருக்கிறோம் என்பதை சொல்லிக்கொண்டே இருப்போம், ஜனநாயக, உரிமைப் போராட்டங்கள் எப்போதும் தோற்றதில்லை நாமும் வெற்றி பெறுவோம் இந்த ஜனநாயகத்திற்கு புறம்பான, அரசியல் சட்டத்திற்கு புறம்பான ஆட்சியை எதிர்த்து போராடுவோம்.

மற்றொன்றையும் கூறி விட வேண்டும், தற்போது இரண்டு தீர்ப்புகள் வந்துள்ளன.

ஒரு வழக்கு ஜபேதா பேகம் என்ற இஸ்லாமியப் பெண்ணுடையது. அவரது பான் கார்டு, குடும்ப அட்டை, இரண்டு வங்கிக் கணக்குப் புத்தகங்கள், அவரது அப்பா ஜாபேத் அலியின் NRC பதிவு விவரங்கள், அவரது தாத்தா, பாட்டி, பெற்றோர்கள், கணவர் ஆகியோருடன் இணைந்து அவர் பெயரும் உள்ள வாக்காளர் பட்டியல்கள், நில வரி இரசீதுகள் போன்ற 14 வகை ஆவணங்களைக் காட்டியும் தனது குடியுரிமையை ஏற்காத குடியுரிமைப் பதிவேட்டு ஆணையத்தின் மறுப்பை எதிர்த்து அசாம் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார். அவரது கோரிக்கைகளை மறுத்து அவ்வழக்கின் தீர்ப்பு இப்போது வந்துள்ளது.

அவரது கோரிக்கையை மறுப்பதற்கான காரணங்களை நீதிபதிகள் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்கள். ஏற்கனவே வங்கிக் கணக்கு, பான் கார்டு ஆகியவற்றைக் குடியுரிமைக்கான ஆவணமாக ஏற்றுக் கொள்ள முடியாது என 2016இல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பினைச் சுட்டிக்காட்டி மறுத்துள்ளது.

அடுத்து, கிராம நிர்வாக அதிகாரி கொடுத்த நிலவரி இரசீதுகளை ஆவணமாக ஏற்கமுடியாது; ஆனால் திருமணத்துக்குப் பின்னர் கணவன் வீட்டுக்கு வந்து விட்டார் என்றளிக்கும் சான்றிதழ் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் விளக்கமளித்துள்ளது.

வாக்காளர் பட்டியலில் அடுத்தடுத்துப் பெயர்கள் இருப்பினும், அவரது தாத்தா, பாட்டிக்கும், பெற்றோருக்கும், சகோதரருக்கும் உள்ள உறவுமுறை உரிய சான்றிதழ்கள் (வாரிசு சான்றிதழ்கள்) வழியே நிரூபிக்கப்படவில்லை போன்ற காரணங்களால் அவரது குடியுரிமைக் கோரிக்கை மனுவைத் தள்ளுபடி செய்திருக்கிறது உயர்நீதி மன்றம்.

மற்றொரு வழக்குக்கு, அசாம் உயர்நீதிமன்றத்தில் பிப்ரவரி 12ஆம் தேதி ஒரு தீர்ப்பு வந்துள்ளது. ஒருவருக்கு குடியுரிமை இல்லையென்று கூறினார்கள். யாரைச் சொல்கிறார்களென்றால், முனீந்திர பிஸ்வாஸ் என்கின்ற இந்துக்குத்தான் சொல்கிறார்கள். அவர் அப்பா இந்திர மோகன் பிஸ்வாஸ் இராணுவத்தில் பணியாற்றியவர். அவருடைய தாத்தா துர்கா சரண் பிஸ்வாஸ், அவரும் இராணுவத்தில் பணியாற்றியவர். இராணுவத்தில் பணியாற்றியவரின் பேரனுக்கு குடியுரிமை இல்லையென்று கூறிவிட்டார்கள். அவர் 1964, 1970 ஆகிய ஆண்டுகளில் அவர் பெயரில் நிலங்களை வாங்கியுள்ளார்; அவற்றை ஆவணங்களாகக் காண்பிக்கிறார், வாக்காளர் அட்டையையும் கொண்டு போனார், அவர்கள் சொல்கிறார்கள் 1997 வாக்காளர் பட்டியலில்தான் உள்ளது; அதற்கு முன்னர் எங்கே என்று கேட்கிறார்கள். 1997 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை காண்பிப்பதே கடினம்; அதற்கு முன்பான தேர்தல்களின் வாக்காளர் பட்டியல்களை ஒரு சாதாரண குடிமகன் எப்படிப் பெற முடியும், எப்படிக் காண்பிப்பது? நீ கொடுத்த சொத்து ஆவணம் என்பது தனி நபர் ஆவணம். அது பதிவானதை உரிய சாட்சிகளுடன் நிரூபிக்கவில்லை என்பதால் ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறுகிறது உயர்நீதி மன்றம்; 1964இல் பதிவானபோது விற்றவர், 21 வயதுள்ளவராக இருந்திருந்தாலே அவருக்கு இப்போது 77 வயதாக இருக்கும். 30,40 வயதானவர் என்றால் நீங்களே கணக்கிட்டுக் கொள்ளுங்கள். சாட்சிகளுக்கும் இதுவே பொருந்தும். இதனைக் காரணமாகக் காட்டி சொத்து ஆவணத்தை சான்றாக ஏற்க மறுத்துள்ளது; ஏற்றுக் கொள்ள முடியாது என்று நிராகரித்து விட்டார்கள். குடியுரிமை மறுத்த தீர்ப்பு கடந்த 12ஆம் தேதி வந்துள்ளது. அன்றாடம் வேலைக்காக இடம் பெயர்ந்து வீடில்லாதவர்களுக்கு, சொத்தில்லாதவர்களுக்கு மட்டுமல்ல; சொத்து வைத்துள்ளவர்களும் ஆவணங்களைக் காட்டினாலும், அதையும் ஏற்க முடியாது என கூறுமளவுக்குத்தான் நீதி பரிபாலனம் உள்ளது.

எனவே, இச்சட்டம் இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல; இந்துக்களுக்கும் எதிரானது என்று தெரிந்து கொண்டு, இஸ்லாமியர்களின் முன்முயற்சிக்கு நன்றி கூறியவர்களாக, இந்துக்களும் அதிகளவில் வந்து சேருங்கள் அனைத்து தரப்பினரும் இணைந்து போராடுவோம், அனைவருக்கும் எதிரான சட்டம், சங்கிகள் தங்களுக்கு விருப்பம் இல்லாதவர்களை, தங்கள் கருத்தை ஏற்காதவர்களை, இணங்காத வர்களை, எதிர்ப்பவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற, நாடற்றவர்களாக ஆக்கப் பயன்படும் சட்டம், இதை எதிர்த்து போராடுவோம்; வெற்றி பெறுவோம்.

(நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# குடியுரிமையைப் பறிக்கும் கணக்கெடுப்புகளை புறக்கணிப்போம்!

- ரேஷன் கார்டு, ஓட்டுப் போட அட்டை - ஆதார், கார் ஓட்ட உரிமம் - இதுதான் நமக்குத் தெரிந்த நம்மிடம் உள்ள அடையாள அட்டைகள். ஆனால், டில்லியில் மோடி ஆட்சிக்கு இந்த அடையாள அட்டைகள் போதாதாம்; புதுப்புது அடையாளங்களைக் கேட்கிறது.
- அது என்ன அடையாளம் தெரியுமா? நாம் இந்த நாட்டின் குடிமக்களாக - அதாவது இந்தியாவைச் சார்ந்தவர்கள்தான் என்பதை நாமே நிரூபிக்க வேண்டுமாம்; அப்போதுதான் இந்த நாட்டில் இருக்க முடியுமாம்; இல்லாவிட்டால் நாம் நாடற்ற அனாதைகளாம்!
- நாம் - இந்த நாட்டின் குடிமக்கள் என்பதை நிரூபிக்க புதிய கணக்கெடுப்பு நடத்தப் போகிறார்கள். இது எப்போதும் எடுக்கப்படும் ‘சென்சஸ்’ - அதாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு அல்ல. அதில் நாம் சொல்வதைக் கேட்டு எழுதிக் கொண்டு போய் விடுவார்கள். இப்போது எடுக்கப்படும் கணக்கு என்பது வேறு; அது என்ன புது கணக்கெடுப்பு?
- அதற்குப் பெயர் ‘தேசிய மக்கள் தொகைப் பதிவேடு’. இதற்கு நாம் 21 கேள்விகளுக்கு பதில் சொல்ல வேண்டும். ஒவ்வொன்றுக்கும் அடையாள அட்டையைக் காட்ட வேண்டும். நம்முடைய செல்போன், ஆதார், ஓட்டுநர் உரிமம், பாஸ்போர்ட் எண். இவைகளைப்போல பலப்பல. எல்லாவற்றையும்விட, நமது அப்பா அம்மா பிறந்த தேதி; பிறந்த ஊர்; அதற்கான பிறப்பு சான்றிதழ் தர வேண்டுமாம். நம்மிடம் நமக்கான ‘பர்த் சர்டிபிகேட்டே’ (பிறப்பு சான்றிதழே) பலரிடம் இல்லாதபோது அம்மா, அப்பா பிறப்பு சான்றிதழுக்கு எங்கே போவது?
- இந்த ஆவணங்கள் நம்மிடம் இல்லை என்றால் - அதை ஒரு அதிகாரி குறித்துக் கொள்வார். பிறகு மற்றொரு கணக்கெடுப்பு அடுத்து வரும். அதற்குப் பெயர் ‘தேசிய குடியுரிமைப் பதிவேடு’. அதற்கு ஒரு அதிகாரி வருவார். நம்மிடம் இல்லாத ஆவணங்களைக் காரணம் காட்டி நீ இந்த நாட்டில் வாழும் தகுதிக்கே உரியவர் அல்ல என்று கூறும் அதிகாரம் அந்த அதிகாரிக்கு உண்டு. அவர் சந்தேகத்துக்கு உரியவர் என்று ஒரு குறிப்பு எழுதினாலே போதும். அவர் மனசு வச்சால் தான் நமக்கு வாழ்க்கை; இல்லையேல், தடுப்புக் காவல் முகாம் என்று சிறைக்குள்ளே தள்ளுவார்களாம். அசாம் மாநிலத்தில் அதுதான் நடக்கிறது.
- 1987க்குப் பிறகு பிறந்திருந்தால்இந்தியக் குடிமகனாக பெற்றோர்களில் ஒருவர் இருந்தால் போதும். 2004க்குப் பிறகு பிறந்தவர்கள் என்றால் பெற்றோர்களில் ஒருவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், பெற்றோர்களில் ஒருவர் சட்ட விரோதமாகக் குடியேறியவராக இருக்கக் கூடாது. இப்போது பா.ஜ.க. ஆட்சி கொண்டு வந்துள்ள குடியுரிமை திருத்தச் சட்டம் 2014ஆம் ஆண்டுக்கு முன்பு இந்தியாவில் குடியேறியுள்ள இந்துக்கள், பவுத்தர்கள், கிறிஸ்தவர்கள், பார்சிக்கள், சமணர்கள் மற்றும் சீக்கியர்கள் ஆகிய மதப் பிரிவைச் சார்ந்தவர்கள் மட்டும் குடியுரிமைப் பெறலாம். ஆனால் இஸ்லாமியர்களாக இருந்தால் அவர்களுக்கு குடியுரிமை கிடையாது என்று மக்களின் குடியுரிமையை மதத்தின் பெயரில் பிரிக்கிறது.
- குடியுரிமை திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதே குடியுரிமைப் பதிவேடு ஒன்றை உருவாக்குவதற்குத்தான். குடியுரிமைப் பதிவேடு வந்தால் பாதிப்பு இஸ்லாமியர்களுக்கு மட்டுமல்ல; இந்துக்களுக்கும்தான். அசாமில் இப்போது 12 இலட்சம் இந்துக்கள், நாடற்றவர்களாக்கப்பட்டு விட்டார்கள். அவர்களுக்கு மீண்டும் குடியுரிமை வழங்கி, இஸ்லாமியர்களை மட்டும் தனிமைப்படுத்தவே குடியுரிமை திருத்தச் சட்டம் வந்திருக்கிறது.
- இந்த நாட்டில் நாம் குடிமக்களாக தலைமுறை தலைமுறையாக வாழ்கிறோம். வீடு இல்லை; தண்ணீர் இல்லை; சுகாதார வசதி இல்லை; செம்மஞ்சேரி களுக்கும், கண்ணகி நகர்களுக்கும் ஒண்டக்கூட இடம் இல்லாத இடத்தில் ஆடு, மாடு போல அடைக்கப்படுகிறோம். இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்க்க வக்கில்லாத ஆட்சி; இந்த நாட்டுக்கு சொந்தக்காரனா என்பதற்கு ஆதாரங்களைக் கேட்கிறது. அதுவும் ஈழத் தமிழராக அடைக்கலம் தேடி வந்தவர்களுக்கும் குடியுரிமை இல்லை.
- பசியும், வறுமையும், ஏழ்மையும், மதம் பார்த்து வருவதில்லை. அது எல்லோருக்கும் பொதுவாக இருக்கும்போது மதவெறி தான் நமது பிரச்சினையைத் தீர்க்கப் போகிறதா?
- பார்ப்பனர், பணக்காரர், பங்களாவாசிகள், மெத்தப் படித்து இலட்சம் இலட்சமாக சம்பளம் வாங்கும் வசதிக்காரர்களிடம் வேண்டுமானால் எல்லா சான்றிதழ்களும் இருக்கும். அவர்களுக்கு எப்போதும் சொகுசு வாழ்க்கைதான். அன்றாடம் காய்ச்சியான நாம் எங்கே போய் பிறப்பு சான்றிதழ்களையும், அப்பா, அம்மா பிறப்பு சான்றிதழ்களையும் தேடுவது?
- ‘இந்து’, ‘இந்து’ என்று கூறி நம்மை ஒடுக்கப்பட்ட ஜாதியாக்கி வைத்து விட்டான். இப்போது இந்துக்களுக்கான நாட்டையே உருவாக்கி இருக்கிற ‘ஒண்டிக் குடித்தனத்தையும்’ புடுங்குவதற்கு வருகிறது, புதிய கணக்கெடுப்புகள்.
- இளைஞர்களே! தோழர்களே! சகோதரர்களே! இந்த குடியுரிமை திருத்தச் சட்டம் நமது தலைக்கு மேல் தொங்கும் கத்தி. இதை எதிர்த்து முறியடிக்க வேண்டியது நமது கடமை!
- தமிழக அரசே; ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் -
- மக்களை இந்து-முஸ்லீம் என்று கூறுபோடும் -
- குடியுரிமை திருத்தச் சட்டம் - மக்கள் தொகைப் பதிவேடு - தேசிய குடியுரிமைப் பதிவேடுகளை எடுக்காதே!
- மத்திய அரசின் மிரட்டலுக்கு அடிபணியாதே!

- என்று உரத்து முழங்குவோம், வாருங்கள்!

- குடியுரிமையைப் பறிக்கும் கணக்கெடுப்புகளைப் புறக்கணிப்போம்!

**மயிலாப்பூர் பகுதியில் நடந்த மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் வழங்கப்பட்ட துண்டறிக்கை**

## சேலம் மேற்கு மாவட்டக் கழக சார்பில் மேட்டூரில் ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டம் தொடக்கம்



சேலம் மேற்கு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தின் சார்பாக முதல் கலந்துரையாடல் கூட்டம் 26.01.2020 கொளத்தூர் பெரியார் படிப்பகத்தில் பகல் 12.00 மணி அளவில் திராவிடர் விடுதலைக் கழக மேற்கு மாவட்டச் செயலாளர் சி.கோவிந்தராசு தலைமையிலும், தலைமை செயற்குழு உறுப்பினர் காவை ஈசுவரன் முன்னிலையிலும் நடைபெற்றது. அதற்கு முன்பாக கொளத்தூர் நிர்மலா மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற குருதிக் கொடை முகாமில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக தோழர்கள் கலந்து கொண்டு இரத்த தானம் செய்தனர். ‘நிமிர்வோம்’ வாசகர் வட்டத்தின் முதல் கூட்டத்தில் வாசகர் வட்டத்தின் பொறுப்பாளராக மே.கா. கிட்டு அறிவிக்கப் பட்டார். தலைமை செயற்குழு உறுப்பினர் அ.சக்திவேல் அறிமுக உரைக்கு பின்னர் வாசகர் வட்டத்தில் நவம்பர், டிசம்பர் 2019 மாத ‘நிமிர்வோம்’ இதழில் வெளிவந்த கட்டுரைகளை பற்றிய விவாதத்தினை வாசகர் வட்ட பொறுப்பாளர் மே.கா. கிட்டு விளக்கினார். மேலும் இனி ஒவ்வொரு மாத இறுதியிலும் நிமிர்வோம் வாசகர் வட்ட கலந்துரையாடல் கூட்டங்கள் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் கொளத்தூர், காவலாண்டியூர், மேட்டூர், ஆர்.எஸ் , நங்கவள்ளி ஆகிய பகுதி தோழர்கள் கலந்து கொண்டனர். இறுதியாக கொளத்தூர் நகர செயலாளர் இராமமூர்த்தி நன்றியுரை கூற வாசகர் வட்ட கூட்டம் நிறைவுற்றது.

## கழகக் கட்டமைப்பு நிதி

நாச்சியார் கோயில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கழகக் கட்டமைப்பு நிதிக்கு ரூ.20,000/-மும், கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப் பட்டினம், ஓய்வு பெற்ற ஆசிரியர் இளங்கோவன், கட்டமைப்பு நிதியாக ரூ.5000/-மும் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினர்.

## காவலாண்டியூர் ஈசுவரன் கழக ஏட்டுக்கு நன்கொடை

காவலாண்டியூர் கழகத் தோழர், தலைமைக் குழு உறுப்பினர் ஈசுவரன் மகன் கனிகாசெல்வன்-இலக்கியா ஜாதி மறுப்பு மணவிழா மகிழ்வாக கழக ஏட்டுக்கு ரூ.5000/- நன்கொடை வழங்கியுள்ளனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

## ஈரோடு குடியுரிமை திருத்தச் சட்டப் போராட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பங்கேற்பு

23.02.2020 அன்று மாலை 4 மணிக்கு NPR NRC CAA குடியுரிமைச் சட்டங்களை திரும்ப பெறக் கோரி ஈரோட்டில் செல்ல பாட்ஷா வீதியில் (ஈரோடு தினசரி மார்கெட் பின்புறம்) இஸ்லாமிய பெண்கள் பெரும் திரளாக நடத்தும் உரிமை மீட்பு தொடர் முழக்க 3ஆம் நாள் போராட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு அவர்களுக்கு பாராட்டும் நன்றியும் கூறினார்.

தனது உரையில் இது அனைத்து மக்களுக்குமான பாதிப்பு என்று உணராமல் பல்வேறு மக்கள் இன்னும் அமைதி காப்பதாகவும் தோழர்கள், குறிப்பாக பெண்கள் முன்னெடுத்து போராடுவது மகிழ்ச்சிக்கும் நன்றிக்கும் உரியது என்றும் தன் நீண்ட உரையில் குறிப்பிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழக மாநில துணைப் பொதுச் செயலாளர் சுப்புலட்சுமி ஜெகதீசன் இந்த சட்டங்களுக்கு எதிராக எப்போதும் போல் திமுக அரணாக நின்று காக்கும் என்று தன் உரையில் குறிப்பிட்டார். 500 பெண்கள் போராட்டத்தில் பங்கேற்றனர். இந்த சட்டங்களைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பி தங்களின் வலுவான எதிர்ப்பினை மத்திய மாநில அரசுகளுக்கு தெரிவித்தனர்.

## கழகத்தில் இணைந்த புதிய தோழர்கள்

கோவையில் பிப்.12 அன்று நடந்த நீலச்சட்டை பேரணியன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி முன்னிலையில், துளசி, அறிவரசு, சுரேசு, அசோக், மாதவன் ஆகிய புதிய தோழர்கள் இணைந்தனர். இவர்கள் கோவை மாவட்டத் தோழர்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் மருத. உதயகுமார் 16.02.2020 அன்று திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் தன்னை திராவிடர் விடுதலைக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 6th March 2020

55 வருட பட்டின் பாரம்பரிய ஸ்தாபனம்...
சிந்தாமணி சில்க்ஸ்
கைத்தறி திருமண பட்டு சேலை தயாரிப்பாளர்
& மொத்த விற்பனையாளர்
ஹோல்சேல் கடை
சிந்தாமணியூர், ஓமலூர் வழி, சேலம்.(DT).
04290 248304/ 90952 48304
chinthamanisilks | www.chinthamanisilks.com

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN